முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1572

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.01.2024,** வியாழக்கிழமை

1. அறத்தின் காவலனே அரங்கா
அன்னதான சேவையாற்றும் தேசிகா
வரம் தந்து உலகோரை மீட்க
வள்ளலாக வந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 04 ம் நாள், 18.01.2024, வியாழக்கிழமை)
வரமென அரங்கன் தருகின்ற அருளமுது
வையகத்தில் பசிபிணி இல்லா உலகோர்க்கு ஞானம் தரும் உயரமுது
3. அமுதுதனை உலகோர் அறசாலைகளாக உலகமெங்கும் நிறுவி
ஆற்றல்பட தர்மம் வளர்த்துவர
வகைபட அரங்கனை வணங்கி
வையகத்தில் நடைபெறும் அனைத்து தர்மங்களுமே
4. அரங்கன் ஆசிபட நடப்பதாலே
அறிவிப்பேன் அனைத்து கிளை சங்கங்களுமே
ஆற்றல்மிக்க ஞான சபைகளாக மாறி
அகிலத்தில் அரங்கன் தேடுகின்ற
5. ஞான யுகமாற்றத்தை அற்புதமாய்
ஞானத் தலைமைகளை உருவாக்கும்
மாற்றங்களையும் செய்து இனிதே
மண்ணுலகில் அற்புதம் நிகழ்த்தக் கூடும்
6. ஆகவே உலகோர் அரங்கன் திருவடி பற்றி
அச்சமற அரங்கா முருகா என வேண்டி
அறிவிப்பேன் பிரணவக்குடில் நோக்கி வந்தால்
இந்த கலியுகத்தில் அற்புதம் சடுதி நிகழும்

7. கலியுகம் ஞான யுகமாக மாற்றம் கண்டு
அரங்க மகான் தயவாலே அற்புதமான
ஞானச் சித்தர் காலமும்
ஞான ஆட்சிக் காலமும் உதயமாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—